ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீகமலவல்லி நாயகி ஸமேத ஸ்ரீஅழகியமணவாள பரப்ரஹ்மணே நம:




(உறையூர் "நம்நாச்சியார்" கமலவல்லி)

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# ஸ்ரீலக்ஷ்மீ தந்த்ரம்

(ஐந்தாவது அத்யாயம் – ஆறாம் பகுதி)
இதற்கான ச்லோகம் மற்றும் பொருள் – தமிழில்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீஅஹோபிலதாஸன் க. ஸ்ரீதரன்
Email: sridharan_book@yahoo.com

5-70 தண்டீதி த்ரவ்ய ஸம்யோகாச் சுக்லோ குண ஸமந்வயாத்
கச்சதீதி க்ரியாயோகாத் புமாந் ஸாமாந்ய ஸம்ஸ்திதே:
5-71 டித்த: சப்த ஸமாயோகாதிதீயம் பஞ்சதா ஸ்திதி:
கர்மேந்த்ரிய: குணை: ச ஏதத் ஸங்கல்பம் தநுதே மந:

பொருள் – குச்சி என்பது ஒரு பொருள், வெண்மை என்பது குணம், நட்த்தல் என்பது செயல்பாடு (கர்மம்), மனிதன் என்பவன் குறிப்பட்ட பண்புகள் கொண்ட ஒரு வகை, சப்தம் என்ற வகையில் பேச்சின் சப்தம் என்பது ஒரு வகை போன்ற ஐந்தும் விகல்பத்தின் வகைகள் ஆகும். கர்ம இந்த்ரியங்களின் துணையுடன் மனம் ஸங்கல்பம் என்பதை அடைகிறது.

விளக்கம் – ஐந்து வகையான விகல்பங்கள் – பொருள் ரீதியான வேறுபாடு, குணவேறுபாடு, கர்மங்களில் வேறுபாடு, பிரிவுகளில் வேறுபாடு, வகைகளில் வேறுபாடு என்பதாகும். இவை உதாரணம் மூலம் மேலே கூறப்பட்டன. பல பொருள்கள் உள்ளபோது, “இது குச்சி” என்று எடுத்தல் த்ரவ்ய விகல்பம் ஆகும். பல நிறங்களில், “இது வெண்மை” என்று தீர்மானித்தல் குண விகல்பம் ஆகும். இது போன்றே மற்ற உதாரணங்களுக்கும் கொள்க. ஸங்கல்பம் என்பது உறுதி ஆகும்.

5-72 ஔதாஸீஷ்யச்யுதிர்யா ஸா ஸங்கல்ப உத்யோக நாமிகா
அஹங்காரேண ச ஏதஸ்மிந் உபயத்ர குணே ஸ்திதி:

பொருள் – ஆக பலவிதமான வேறுபாடுகளைக் களைந்து தெளிவான ஒன்றை அடைவதே ஸங்கல்பம் என்பதாகும். இவ்விதம் வேறுபாடுகளைக் களைதல் என்னும் செயல்பாடு உத்யோகம் எனப்படுகிறது. இது அஹங்காரத்துடன் சேர்ந்து கொண்டு, இரண்டு விதமான இந்த்ரியங்களையும் ஒன்று சேர்க்கிறது.

5-73 ஞானேந்த்ரிய குணே ஸோ அயமிமாநேந வர்த்ததே
தேச கால அந்வயோ ஜ்ஞாது: அபிமான: ப்ரகீர்த்தித:

பொருள் – ஞான இந்த்ரியங்களுடன் இணைந்த அஹங்காரம் என்பது அபிமானமாகப் பரிணமிக்கிறது. அபிமானம் என்பது “நான் இந்த நேரத்தில், இந்த இடத்தில் உள்ளேன்”, என்பது போன்று தன்னை மற்றவற்றுடன் இணைத்துக் கொள்வதாகும்.

குறிப்பு – அபிமானம் என்பதை “நான் இவ்விதம், இது இங்கே உள்ளது”, என்பது போன்ற சிந்தனைகளாகவும் கொள்ளலாம்.

5-74 மமாத்ய புரதோ பாதீத்யேவம் வஸ்து ப்ரதீயதே
கர்மேந்த்ரிய குணே த்வேஷ ஸம்ரம்பேண ப்ரவர்த்ததே

பொருள் – “நான் இப்போது இந்த இடத்தில் காணப்படுகிறேன்”, என்ற எண்ணம் தோன்றுகிறது அல்லவா? இந்த அறிவானது கர்ம இந்த்ரியங்களின் காரணமாகவே உண்டாகிறது. இதுவே ஸம்ரம்பம் என்பது தோன்றக் காரணமாக உள்ளது.

5-75 ஸங்கல்ப பூர்வ ரூபஸ்து ஸம்ரம்ப: பரிகீர்த்தித:
புத்தி: அத்யவஸாயேந ஞானேந்த்ரிய குணே ஸ்திதா

பொருள் – ஸங்கல்பம் என்பது உண்டாவதற்கு ஸம்ரம்பம் என்பதே தொடக்கமாக உள்ளது. புத்தியானது ஞான இந்த்ரியங்களின் குணங்களில் நிலை நிற்கும்போது அத்யவஸாயம் உண்டாகிறது. (அத்யவஸாயம் என்பது ஒரு பொருளைக் குறித்துத் தெளிவாக தீர்மானம் செய்து, ஒரு முடிவுக்கு வருவதாகும்).

5-76 புத்தி: அத்யவஸாய அர்த்த அவதாரணம் உதீர்யதே
அவதாரணம் அர்த்தாநாம் நிச்சய: பரிகீர்த்தித:

பொருள் – எந்த ஒரு பொருளைப் பற்றிய உண்மையான தத்துவத்தையும் அறிந்து கொள்ளுதல் என்பது அத்யவஸாயம் ஆகும். இத்தகைய உறுதியான தீர்மானமே (அவதாரணம்) “நிச்சயம்” என்று கூறப்படுகிறது.

5-77 கர்மேந்த்ரிய குணே புத்தி: ப்ரயத்நேந ப்ரவர்த்திதே
த்ரயோதசவிதம் ஜ்ஞேயம் தத் ஏதத் கரணம் புதை:

பொருள் – கர்மேந்த்ரியங்களின் துணையுடன் புத்தியானது ப்ரயத்னம் என்னும் பல முயற்சிகளில் நிலை நிற்கிறது. இப்படியாக உள்ள பதின்மூன்று வகைகளை – ஞானத்திற்கான கருவிகள் என்று கூறுகின்றனர்.

5-78 பாஹ்யம் தசவிதம் ஜ்ஞேயம் த்ரித அந்தகரணம் ஸ்ம்ருதம்
த்ரயோவிம்சதிரேதே து விகாரா: பரிகீர்த்திதா:

பொருள் – இப்படியாக வெளி இந்த்ரியங்கள் என்பது பத்து வகைப்படும் (ஞான இந்த்ரியங்கள் – 5, கர்ம இந்த்ரியங்கள் – 5). அந்தகரணம் என்பது மூன்றாகும் (புத்தி, மனம், அஹங்காரம்). ஆக இந்த இருபத்து மூன்றும் (கடந்த ச்லோகத்தில் கூறப்பட்ட 13 + 10 இந்த்ரியங்கள்) ஆகியவை விகாரங்கள் எனப்படும்.